www.agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
## ஆறாம் தவணைப் பரீட்சை - 2022
## Conducted by Field Work Centre, Thondaimanaru.
## 6th Term Examination - 2022

FWC

| | | |
|---|---|---|
| தொடர்பாடலும் ஊடகக்கற்றையும் I<br>Communication and Media Studies I | Two hours<br>Gr -13 (2022) | 29 T I |

**அறிவுறுத்தல்கள்**

- விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது சுட்டெண்ணை எழுதுக.
- 1 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1) (2) (3) (4) (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப்பொருத்தமான விடையைத் தெரிந்தெடுத்து அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுதலுக்கமைய விடைத்தாளில் புள்ளடி (x) இடுவதன் மூலம் காட்டுக.

## பகுதி I

01. தொடர்பாடல் செயன்முறையில் மீள்கட்டமைப்பின் முக்கியத்துவத்தினை கூறியிருந்தவர் பின்வருபவர்களில் யார்?
    1) வில்பர் ஷ்ராம்  2) ஷ்ராம் மற்றும் ஒஸ்கூட்  3) எட்வேர்ட் சப்பியர்
    4) ஷனோன் மற்றும் வீவர்  5) ஹரோல்ட் லாஸ்வெல்

02. புகழ், பிரசித்தம், புலக்காட்சி உருவாக நேரடியாகவும் மறைமுகமாகவும் பங்களிப்புச் செய்யும் தொடர்பாடல் வகை
    1) ஆளுள் தொடர்பாடல்  2) ஆளிடைத் தொடர்பாடல்  3) குழுத் தொடர்பாடல்
    4) பொதுசனத் தொடர்பாடல்  5) வெகுசனத் தொடர்பாடல்

03. தொடர்பாடல் செயன்முறை ஒன்றில் தொடர்சித் தன்மையை பேணுவதற்கு அடிப்படையாக அமையும் கூறு
    1) தொடர்பியலாளன்  2) பொருட்கோடல்  3) தகவல்
    4) குறிமுறையவிழ்ப்பவர்  5) சந்தர்ப்பம்/ சூழல்

04. பிரசித்த பண்பாட்டியலை உருவாக்க கூடிய பிரதான வெகுசன ஊடகப் புலம்
    1) பத்திரிகை ஆகும்  2) வானொலி ஆகும்  3) சினிமா ஆகும்
    4) தொலைக்காட்சி ஆகும்  5) சமூக ஊடகம் ஆகும்

05. வெகுசனத் தொடர்பாடலின் ஆகக் குறைந்த முக்கியமான பணி எது?
    1) பன்முகக் கருத்தியல்களை உருவாக்குவது
    2) சமூகமயமாதல்
    3) பெறுநர்களின் தேவைகளோடு ஒத்திருப்பது
    4) சமூக மரபுரிமைகளினை ஊடுகடத்துவது
    5) சமூக வளர்ச்சிக்கான தூண்டலைத் தருவது

06. வாய்மொழி சார் தொடர்பாடல் பற்றிய கூற்றுக்களுள் பொருத்தமானதாக அமையாதது?
    1) சொற்களை ஒலிப்பதனூடாக நடைபெறுவது.
    2) இருவழி தொடர்பிற்கான சூழ்நிலை அதிகம் இருத்தல்.
    3) மொழி சார்ந்த தேர்ச்சி நிலைகள் இன்றி ஈடுபட முடிதல்.
    4) மனித தொடர்புகளை வலுப்படுத்தக் கூடியது.
    5) முகக்குறிப்புக்கள், சைகைகள், உணர்வு வெளிப்பாடுகள் மூலமும் கருத்துப் பரிமாற்றம் நடைபெறல்.



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

07. ◆ பெறுநர் குழுவிற்கேற்ப வேறுபட்டிருத்தல்.
◆ வாய் மூலம் வெளிப்படும் சொற்களோடு மட்டுப்படுத்தப்பட்டிருத்தல்.
◆ தொடர்பாடுநர் பெறுநர் எப்போதும் தொடர்பாடல் நிகழும் இடத்தில் காணப்படுவர்.

மேற்குறித்த கருத்துக்களுடன் பொருந்தக் கூடிய தொடர்பாடல் வடிவம்
1) ஆளிடைத் தொடர்பாடல் 2) அளிக்கைத் தொடர்பாடல் 3) பேச்சுத் தொடர்பாடல்
4) வாய்மொழித் தொடர்பாடல் 5) ஆளுள் தொடர்பாடல்

08. அபிவிருத்தி தொடர்பாடலிலின் ஆரம்ப காலத்தில் மேலிருந்து கீழ் நோக்கி அபிவிருத்தி பற்றிய சிந்தனையை கடத்துவதோடு தொடர்புபடுத்தி விளக்கமளிப்பது.
1) வாயிற்காப்பு எண்ணக்கரு ஆகும்.
2) இருபடிநிலை எண்ணக்கரு ஆகும்.
3) சீனத் தொடர்பாடல் எண்ணக்கரு ஆகும்.
4) புத்தாக்கங்களின் பரவல் கோட்பாடு ஆகும்.
5) தூண்டற் பேறு கோட்பாடு ஆகும்.

09. மனிதர்களைப் பீடிக்கும் நோய்கள், தொற்று நோய்கள் மற்றும் கிரக தோஷங்கள் போன்றவற்றிலிருந்து பாதுகாப்பு பெறுவதற்கான வழிமுறைகளினை எடுத்துக் கூறிய பொருத்தமான ஊடக முறைகள்
1) நாட்டார் பாடல், கிராமிய நாடகங்கள்
2) நாட்டார் கவிதைகள், பழமொழிகள்
3) நாட்டார் கதைகள், நாட்டார் கவிதைகள்
4) நாட்டார் நாடகங்கள், கிரியைகள் சடங்குகள்
5) நாட்டார் பாடல்கள், விடுகதைகள்

10. வானொலி ஊடக மொழிப்பாவனையின் ஒரு பலவீனமாகக் கொள்ளக் கூடியது.
1) எளிமையான மொழிநடை பயன்படுத்தப்படும்.
2) பேசுதலும் கேட்டலும் சமநேரத்தில் நிகழும்
3) காண்பியவாக்கத்தினை உருவாக்கக் கூடிய ஊடக வழிமுறை
4) புவியியல் எல்லைகள் வரையறைகளுக்கு உட்பட்டது.
5) மீள அதனை செவிமடுக்க இயலாது.

11. நாட்டில் நிலவும் அசாதாரண சூழல்களில் உண்மைக்கு புறம்பான செய்திகளை அதிகம் பரவலடைவதற்கு துணை செய்யும் ஊடக வழிமுறை.
1) இணையத்தளம் 2) சமூக ஊடகம் 3) பிரஜைகள் ஊடகம்
4) தொலைக்காட்சி 5) இலத்திரனியல் பத்திரிகை

12. A. சிறுவர்களின் மனக் கவலையை தீர்ப்பதில் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் செல்வாக்குச் செலுத்துகின்றது.
B. சிறுவர்களின் மனதில் உலகம் பற்றிய அச்சத்தை ஏற்படுத்துவதில் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் செல்வாக்குச் செலுத்துகின்றது.
C. சிறுவர்களின் சமூகத் தொடர்பு நலிவடைவதில் தொலைக்காட்சி ஊடகம் செல்வாக்குச் செலுத்துகின்றது.

மேற்குறித்த கூற்றுக்களில் வில்பர் ஷ்ராமினால் முன்வைக்கப்பட்ட ஆய்வறிக்கையுடன் பொருந்தும் கூற்றைத் தெரிவு செய்க.
1) A,B கூற்று 2) A,C கூற்று 3) C,B கூற்று
4) A கூற்று மட்டும் 5) A,B,C ஆகிய கூற்றுக்கள்

13. ஊடகக் குவிகை என்பது
1) அச்சு ஊடகங்களின் செய்திப் பரவுகை
2) இலத்திரனியல் ஊடகங்கள் ஒன்றினையும் செயன்முறை
3) பாரம்பரிய தொடர்பாடலில் மட்டும் நிகழ்ந்தவொன்று ஆகும்.
4) அச்சு வானொலி தொலைக்காட்சி போன்ற ஊடகங்கள் இணைய வழியில் ஒரு தளத்தில் இணைதல்.
5) தொழில்நுட்பக் கருவிகள் ஒன்றினைந்து குவியப்படுத்துதல்.



agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

14. பிரஜையின் மற்றும் நுகர்வோனின் அபிலாசை, தேவை, வகிபாகம் ஒருவருக்கொருவர் வேறுபடும் என நுகர்வுமயம் பற்றிக் கருத்துக் கூறிய அறிஞர்.
    1) மார்ஷல் பான்ஷி
    2) வில்பர் ஷ்ராம்
    3) ஷனோன் வீவர்
    4) கரஹம் முர்டொர்
    5) R. டொமினிக்

15. பூகோள மயமாதலுடன் தொடர்புபடாத கூற்றினை வெளிப்படுத்துவது.
    1) பல்லின வியாபாரம் முன் வருதல்.
    2) சமூகங்களிற்கிடையில் போட்டித்தன்மை உருவாதல்.
    3) பண்பாட்டு ரீதியில் ஒற்றுமை மற்றும் வேற்றுமைகள் உருவாதல்.
    4) தொழில்நுட்ப வளர்ச்சி பரவலடைதல்.
    5) சர்வதேச வியாபார தொடர்புகள் நலிவடைதல்.

16. இலங்கையின் ஊடகத்துறையின் ஆரம்பம் தொடர்பில் பின்வரும் கருத்தியல்களினை அவதானிக்குக.
    அகிலா - இலங்கையில் ஒல்லாந்தர் காலத்தில் அச்சியந்திரம் அறிமுகப்படுத்தப்பட்டது.
    அபின்ஜா - இலங்கையின் முதலாவது பத்திரிகை கொழும்பு ஜேர்ணல் ஆகும்.
    அபிராமி – உதயதாரகை யாழ்ப்பாணத்தில் கத்தோலிக்க மிசனரிமாரினால் வெளியிடப்பட்டது.
    அஸ்வினி - இந்துசாதனம் இந்து சமய மறுமலர்ச்சிக்காக வெளியிடப்பட்ட பத்திரிகை
    மேற்குறித்த கருத்தியல்களில் சரியான கருத்தியலை புலப்படுத்தும் தொகுதி.
    1) அகிலா மட்டும்
    2) அகிலா அபின்ஜா ஆகியேர் மட்டும்
    3) அகிலா அபின்ஜா அபிராமி ஆகியோர் மட்டும்
    4) அபின்ஜா, அஸ்வினி, அபிராமி ஆகியோர் மட்டும்
    5) அகிலா, அபின்ஜா, அஸ்வினி ஆகியோர் மட்டும்

17. ஒரு நாட்டின் செயற்பாடுகளினை ஒழுங்குபடுத்துவதற்கு தொடர்பாடல் கொள்கைகள் தயாரிப்பது அவசியமாகும் அந்த வகையில் தொடர்பாடல் கொள்கை தயாரிப்பதனோடு தொடர்பல்லாத அம்சத்தினை சுட்டி நிற்பது.
    1) ஊடகத் தொழிலின் உரிமையாண்மை.
    2) தொழில்நுட்ப உட்கட்டமைப்பு வசதி பற்றி அறிதல்.
    3) ஊடகத் தொடர்பு அதிகாரிகளின் பணிகள்.
    4) ஊடக உள்ளடக்கம் பற்றிய அறிவு
    5) ஜனநாயக அரச கட்டமைப்பு

18. பூகோள ஊடகச்சித்தரிப்பை எளிமைப்படுத்தவும் சமமின்மையை இல்லாதொழிப்பதற்கும் ஊடகக் கொள்கைகள் தயாரிக்கப்பட வேண்டும் எனும் கருத்தியலை முன்னெடுப்பதோடு தொடர்புபடுவது.
    1) மனித உரிமைகள் பிரகடனம்
    2) இலங்கை தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்தும் சேவைகள் ஆணைக்குழு
    3) ஐரோப்பிய ஒன்றியத்தின் அறிக்கை.
    4) கோஸ்தாரிகாவின் கொள்கைப் பிரகடனம்
    5) யுனஸ்கோலின் மக்பிறைட் அறிக்கை

19. அபிவிருத்தி தொடர்பாடலில் மக்கள் பங்கேற்பு அதிகமாகவிருத்தல் முக்கியமானதாகும். அந்த வகையில் பங்குபற்றல் ஜனநாயகம் என்பதன் மூலம் சமூக பங்கேற்புக்களை மேலும் அதிகரிக்க உதவி புரியும் தொடர்பாடல் வகை.
    1) ஆளுள் தொடர்பாடல்
    2) குழுத் தொடர்பாடல்
    3) மெய்நிகர் தொடர்பாடல்
    4) வெகுசனத் தொடர்பாடல்
    5) பொதுசனத் தொடர்பாடல்

20. அபிவிருத்தி பற்றிய சிந்தனைகளில் மூன்றாம் உலக நாடுகளின் அபிவிருத்தி சார் செயற்பாடுகளுடன் தொடர்புபடும் அம்சத்தினை சுட்டி நிற்பது.
    1) நன்கு மையப்படுத்தப்பட்ட திட்டமிடல்கள்.
    2) நன்கு வளர்ச்சியடைந்த கைத்தொழில் திட்டங்கள்
    3) இலாப நோக்கிலான சந்தை பொருளாதார முறை
    4) கைத்தொழில் அல்லாத பொருளாதார போக்குகள்
    5) மொத்த தேசிய உற்பத்தி மேம்பட்டிருத்தல்.

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)


21. அபிவிருத்தி என்பது மக்களது அபிவிருத்தியே மாறாக பொருள் சார் அபிவிருத்தி அல்ல எனக் கருத்துக் கூறிய அறிஞர்.
    1) ஆர். கமல்கொட்டே 2) எட்கார் ஒவ்வன்ஸ் 3) டட்ளி சியர்ஸ்
    4) விமல்திசநாயக்கா 5) வில்பர் ஷ்ராம்

22. நிகழ்வு என்பது இலக்குப் பெறுநர் குழுவிற்கு விசேடமான செய்தி ஒன்றைக் கொண்டு செல்லத் திட்டமிடும் சந்தர்ப்பம் என வரைவிலக்கணப்படுத்துபவர்.
    1) பிலிப். ஜே. கிச்சின் 2) பிலிப். கொட்லர் 3) ஜோசப். ஆர். டொமினிக்
    4) சாள்ஸ் டார்வின் 5) ரொசான் பேர்க்

23. பொதுமக்களை வழிப்புணர்வூட்டல், தூண்டுதல் மற்றும் அவர்களுக்கிடையில் இடைத்தொடர்பு செயற்பாடுகளை மேற்கொள்ளத்திட்டமிடல் என்பதே பொதுசனத் தொடர்பு எனக் குறிப்பிட்ட அறிஞர்.
    1) எட்வர்ட். எல். பெர்ணிஸ் 2) சாம் பிளக் 3) சாள்ஸ் பிளேகார்ட்
    4) சாள்ஸ். H. கூலி 5) பிரித்தானிய பொதுமக்கள் தொடர்பு நிறுவனம்

24. வியாபார பொதுமக்கள் தொடர்பு செயற்பாடொன்றுடன் நேரடியாகத் தொடர்புபடாத அம்சத்தை குறிப்பது.
    1) வியாபார கழிவுகளை வழங்கல் 2) வர்த்தக கண்காட்சி மேற்கொள்ளல்
    3) ஊடகத் தொடர்புகளை மேற்கொள்ளல் 4) அனுசரனை நடவடிக்கைகளை மேற்கொள்ளல்
    5) ஊடக மாநாட்டினை நடாத்துதல்

- **பின்வரும் மாதிரி உருவினை அடிப்படையாக கொண்டு கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக.**




25. மேற்குறிப்பிட்ட மாதிரி உரு கணித மாதிரியாக கருதப்படுமாயின் தொடர்பாடுநரை குறிக்கும் எழுத்து.
    1) P 2) Q 3) R 4) S 5) U

26. மேற்குறிப்பிட்ட உருவில் குறிமுறையாக்கம் குறிமுறையவிழ்ப்பு செயற்பாட்டினை அடையாளப்படுத்தும் தொகுதி
    1) P,Q ஆகும் 2) Q,S ஆகும் 3) R,T ஆகும்
    4) R,U ஆகும் 5) U,W ஆகும்

27. மேற்குறிப்பிட்ட மாதிரி உருவில் தகவல்களினை பெற்றுக் கொள்ளும் உசாத்துனை சட்டகத்துடன் தொடர்புடைய விடயத்தினை சுட்டி நிற்கும் ஆங்கிலப் பதம்.
    1) P ஆகும் 2) Q ஆகும் 3) R ஆகும்
    4) U ஆகும் 5) W ஆகும்

28. பாடசாலையில் அதிபர் உரையாற்றிய போது திடிரென ஏற்பட்ட மின்தடை காரணமாக ஒலி ரீதியில் சரியான விளக்கம் முன்வைக்க இயலாது போனது இச்சூழலை அடையாளப்படுத்துவதுடன் தொடர்புபடுவது.
    1) P என இனங்காணலாம் 2) R என இனங்காணலாம் 3) U என இனஇனங்களில்
    4) W என இனங்காணலாம் 5) X என இனங்காணலாம்



agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

29. மேற்கூறப்பட்ட மாதிரி உருவினை ஒத்த தொடர்பாடல் மாதிரி பற்றி விளக்கமளிப்பவர்கள்.
    1) ஹரோல். டி. லாஸ்வெல்
    2) அரிஸ்ரோட்டில்
    3) குளோட் ஷனோன் மற்றும் வொரன் வீவர்
    4) டேவிட். K. பெர்லோ
    5) சாள்ஸ் ஒஸ்கூட் மற்றும் வில்பர் ஷ்ராம்

30. பின்வரும் அம்சங்களில் படைப்பாக்கச் சிந்தனையின் படிமுறைகளுள் பொருத்தமற்ற விடயத்தினை குறிப்பது.
    1) தயாரித்தல்
    2) போசனைக்குட்படுத்தல்
    3) அரும்பல்
    4) சரிபார்த்தல்
    5) ஒளியூட்டம் செய்தல்

31. படைப்பாக்கத்திறன்களினை படைப்பாளி விருத்தி செய்து கொள்வது அவசியமானது ஆகும். அந்த வகையில் படைப்பாக்கத்திறன்கள் தொடர்பில் லியனாடோடாவின்ஸியினால் முன்வைத்த கருத்தியல்களுடன் பொருந்தாதது.
    1) நிரூபணம்
    2) தொடர்பு
    3) மென்மை
    4) ஆழ்பரிவு
    5) ஆர்வம்

32. ஊடகங்களில் வெளி வரும் அம்சங்கள் அனைத்தும் தகவல்களினை அடிப்படையாக கொண்டவை அதன் படி ஊடகங்களே தகவல்களாகும் எனும் கருத்தியலை முன்வைப்பவர்.
    1) மார்ஷல் மக்லுஹான்
    2) சாள்ஸ் கூலி
    3) வில்பர் ஷ்ராம்
    4) ஜேம்ஸ் பொடார்
    5) மக்பிறைட்

33. அரசினது நேரடித் தலையீடு இன்றி சுயாதீனத் தணிக்கை நிறுவனமாக தொழிற்படும் அமைப்பினை புலப்படுத்துவது.
    1) பொது அளிக்கை கட்டுப்பாட்டு சபை
    2) இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு
    3) இலங்கை பத்திரிகைப் பேரவை
    4) இலங்கைத் தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்தும் சேவைகள் ஆணைக்குழு
    5) இலங்கை கணனிகள் அவசர சேவைகள் இணைப்பு நிலையம்

34. ஆய்வுச் செயற்பாடொன்றில் ஏதேனுமொர் நிகழ்வொன்றில் அதிக தடவைகள் காட்டப்படும் பெறுமானத்தினை அழைப்பது.
    1) இடை என
    2) இடையம் என
    3) விகிதாசாரம் என
    4) ஆகாரம் என
    5) இணைவுக் குணகம் என

35. மக்களது படைப்பாக்கங்கள் மற்றும் அவை உருவாக்கப்பட்ட விதம் பற்றிச் சமூக விஞ்ஞான மனப்பாங்கின் மூலம் ஆராயும் போது பயன்படுத்தும் போதியளவு தரவுகளைச் சேகரிக்கும் முறை ஆய்வு என வரையறை செய்யும் நிபுணர்
    1) ஹர்மன். என். மோர்ஸ்
    2) மார்க். ஏப்ரஹாம்
    3) டானியல் லேணர்
    4) லூசியன். பை
    5) விமல் திசநாயக்கா



agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

36. வகுப்பறை ஒன்றில் ஊடகக்கற்கை மாணவர்களிடையே நடைபெற்ற கலந்துரையாடலில் ஒரு பகுதியினர் தெரிவித்த கருத்துக்கள் பின்வருமாறு.

அர்ச்சனா – குற்றவியலை முதன்மைப்படுத்தும் விளம்பரங்களினை பிரசுரித்தலாகாது.

ஜெதுசா – சிறுவர்களுடைய தனிப்பட்ட வாழ்க்கை சம்பந்தமான விடயங்கள் பிரசுரிப்பதனை தவிர்த்தல் வேண்டும்.

டக்ஸாயினி – பாலியல் குற்றங்களில் பாதிக்கப்பட்டவரின் பெயரை பிரிசுரித்தலாகாது

லக்சாயினி – வெளிநாட்டு உறவுகளை பாதிக்கும் விமர்சனங்களினை வெளியிட முடியாது.

ஆகிய விடயங்களினை உள்ளடக்கி வெளியிடப்பட்ட ஒழுக்க நெறி கோவையுடன் தொடர்புடைய ஊடக ஒழுங்குபடுத்தல் அமைப்பு

1) இலங்கை பத்திரிகையாளர் சம்மேளனம்
2) இலங்கை பத்திரிகை பேரவை
3) இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு
4) உழைக்கும் பத்திரிகையாளர் சம்மேளனம்
5) இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு

37. திரைப்படமொன்றுக்கு x சான்றிதழ் வழங்கப்படுவதானது அத்திரைப்படம்

1) வயது வந்தோருக்கு மிகப் பொருத்தம் என்பதனாலாகும்.
2) வயது வந்தோருக்கு மாத்திரம் என்பதினாலாகும்.
3) எல்லைகளற்ற பொதுமக்கள் திரையிடலுக்கானது என்பதினாலாகும்.
4) 18 வயதுக்கு மேற்பட்ட எவருக்கும் என்பதினாலாகும்.
5) 18 வயதுக்குட்பட்ட சிறார்கள் வயது வந்தோரின் துணையுடன் பார்வையிட முடியும் என்பதினாலாகும்.

38. இலங்கையானது உலகளாவிய ரீதியில் மூன்றாமிடத்தினை பெற்றுக் கொண்டதோடு மிக அண்மையில் ஐந்தாண்டு நிறைவினை கொண்டாடிய ஊடகக் கட்டுப்பாட்டுடன் தொடர்புடைய அம்சம்

1) தகவலறியும் உரிமைச்சட்டம்
2) புலமைச் சொத்து சட்டம்
3) காணமலாக்கப்பட்டோர் சட்ட மூலம்
4) இலத்திரனியல் ஊடக அறிமுகம் தொடர்பான சட்டம்
5) கருத்து வெளியிடும் சுதந்திரச்சட்டம்

39. பின்வருவனவற்றைக் கருதுக.

A. ஒரு முகாமைத்துவப்பணியாகும்.

B. ஒரு விற்பனைச் செயற்பாடாகும்.

மேற்படி கூற்றுக்கள் தொடர்புபட்டிருப்பது.

1) A – பொதுசனத் தொடர்புடன் B – நிகழ்வு முகாமைத்துவத்துடன்
2) A- நிகழ்வு முகாமைத்துவத்துடன் B - பொதுசனத் தொடர்புடன்
3) A மற்றும் B இரண்டும் பொதுசனத் தொடர்புகள்
4) A மற்றும் B இரண்டும் நிகழ்வு முகாமைத்துவத்துடன்
5) A பொதுசனத் தொடர்புடனும் B விளம்பரப்படுத்தலுடனும் தொடர்புபடுகிறது.

40. தொலைக்காட்சித் தொடர்நாடகங்களினை தயாரிக்கும் போது அதிகளவில் பயன்படும் கமரா ஒளிப்பதிவு முறை

1) நீள் எடுப்பு
2) இடைநிலை எடுப்பு
3) இடைநிலைஅண்மை எடுப்பு
4) அண்மை நிலை எடுப்பு
5) மிகு அண்மை நிலை எடுப்பு

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!



agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

- பின்வரும் அட்டவணையில் ஊடகக்கற்கைப் பாடத்தில் 10 மாணவர்கள் தவணை 5 இல் பெற்ற புள்ளிகள் வருமாறு. இதனை அடிப்படையாக கொண்டு 41 மற்றும் 42, 43 ஆகிய வினாக்களுக்கு விடை தருக.

| |
|---|
| 55, 50, 84, 80, 84, 57, 78, 68, 84, 80 |

41. மேற்குறிப்பிட்ட புள்ளிப்பரம்பலின் ஆகாரப் பெறுமதியை குறிப்பது.
 1) 55 2) 50 3) 84 4) 78 5) 80

42. மேற்குறிப்பிட்ட புள்ளிப்பரம்பலின் அடிப்படையில் இடைப்பெறுமதியை சரியாக புலப்படுத்துவது.
 1) 57 2) 70 3) 68 4) 72 5) 84

43. இப்புள்ளிப் பெறுமதியின் அடிப்படையில் சரியான கூற்றினை இனம்காண்க.
 1) அனைத்து மாணவர்களும் சித்திப்புள்ளியை பெறவில்லை.
 2) 50 வீதமானவர்கள் சித்தியினை அடைந்துள்ளனர்.
 3) 50 வீதமானவர்கள் 80 புள்ளிகளுக்கு மேல் பெற்றுள்ளனர்.
 4) மாணவர்கள் கல்வி மீது அக்கறையற்றுள்ளனர்.
 5) வினாத்தாள் கடினத்தன்மையானதாக அமைந்துள்ளது.

44. ஊடகக்கற்கைப் பாட ஆசிரியர் தனது மெய்நிகர் வகுப்பறைக்கான இணைப்பினை வட்ஸ்அப் (Whats app) மூலம் உமக்கு அனுப்பியிருந்தார். குறித்த இணைப்பினை அழுத்துவதன் மூலம் நீர்குறித்த வகுப்பறைச் சூழலில் இலகுவாக இணைந்து கொண்டீர் இச் சூழலை தொடர்புபடுத்தும் புதிய ஊடகத்தின் இயல்பு
 1) அதிவேகச் செய்தியனுப்புகை 2) மீயுரை 3) எண்ணிமப்படுத்தல்
 4) தரவுத்தளம் 5) தானியங்கி

45. கணக்கெடுப்புச் செயன்முறையொன்றின் பின்னர் அதில் பங்கேற்ற உறுப்பினர்கள் தமது அனுபவத்தை பின்வருமாறு விபரித்திருந்தனர்.
 சயந்தன் - தலைப்புக்கு பொருத்தமாக எழுதப்பட்டிருந்த தகவல்களை வாசித்ததன் பின்னர் இலகுவாக அமைந்தது.
 தனுஸ்ராஜ் - வகுப்பிலுள்ள ஒவ்வொருவரிடமிருந்தும் தரவுகள் திரட்டப்பட்டதால் மாதிரிகளை தெரிவு செய்தல் இலகுவாயிருந்தது.
 நந்தினி – தரவுகளைப் பெற்றுக் கொடுத்தவர்களை பாராட்டும் விதமாக அவர்களது பெயர்கள் இறுதி அறிக்கையில் உள்ளடக்கப்படவுள்ளன.
 சாரதா – நேர் காணப்படுபவர்கள் பற்றிய தகவல்களை நாம் முதலே அறிந்திருந்ததால் நேர்காணலை மேற்கொள்வது இலகுவாக இருந்தது.
 இவற்றில் சரியான கூற்றுக்களினை முன்வைத்தோர்.
 1) சயந்தன், தனுஸ்ராஜ் 2) சயந்தன், சாரதா 3) சயந்தன், நந்தினி
 4) தனுஸ்ராஜ், நந்தினி 5) நந்தினி, சாரதா

46. முத்துமாரியம்மன் வழிபாட்டியலோடு தொடர்புடையதும் யாழ்ப்பாணப் பாரம்பரியத்தை வெளிப்படுத்துகின்ற நாட்டார் நாடக வடிவத்தை குறிப்பது.
 1) வடமோடி நாடகம் 2) மகிடிக் கூத்து 3) காத்தவராயன் கூத்து
 4) காமன் கூத்து 5) பாஸ்கா நாடகம்

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!

47. பண்பாடு பற்றிய கருத்தியலில் அறிவு பழக்கவழக்கங்கள் கலைகள் சட்டம், விழுமியங்கள் மற்றும் சமூகப் பிராணி என்ற வகையில் மனிதன் தனதாக்கி கொண்ட பழக்கங்கள் என வரையறை செய்தவர்.

1) எட்வர்ட் ரெய்லர் 2) ரல்ப். லிண்டன் 3) மலினோவுஸ்கி
4) ஜோன் டூவி 5) விமல் திசநாயக்கா

48. பண்பாடு தொடர்பாக முன்வைத்த கருத்தியல்கள் பின்வருமாறு.

A. ஊடகப் பண்பாட்டிற்கான எண்ணக்கரு வோல்ற்றர் பென்ஜமீனால் தோற்றுவிக்கப்பட்டது.
B. பூகோளப் பண்பாடு எனும் கருத்து ரொபேட்சன் என்பவரால் அறிமுகப்படுத்தப்பட்டது.
C. பூகோளப் பண்பாடு பாரம்பரிய வெகுசன மற்றும் தேசிய பண்பாடுகளுக்கு ஆதரவானதாகும்.
D. பிரசித்த பண்பாடு இளைஞர் சிறுவர்கள் மீது அதிக தாக்கத்தினை ஏற்படுத்துவது அல்ல

இக்கருத்தியல்களில் சரியான விடயத்தினை குறித்து நிற்பது.

1) A,C ஆகியன 2) A,B ஆகியன 3) B,D ஆகியன
4) B,C ஆகியன 5) C,D ஆகியன

49. பின்வரும் அட்டவனையை பயன்படுத்தி வினாவுக்கு விடை எழுதுக.

| X | Y |
|---|---|
| 1. தனிப்பட்ட அவதானம் | A. ஊடக ஆய்வு, ஊடக மதிப்பீடு |
| 2. அறிவுக் கட்டமைப்பு | B. உருவாக்குவதற்கு தகவல் அவசியம் |
| 3. திறன்கள் | C. உணர்வோடும், உணர்வின்றியும் நிகழும் |
| 4. ஊடகத் திறன்கள் | D. தொடர்ந்தும் ஈடுபடுவதன் மூலம் விருத்தி பெறும் |

X இற்கும் Y இற்குமிடையிலான சரியான சோடி சேர்ப்பினை எடுத்துக் காட்டும் விடை

1) 1D, 2B, 3C, 4A 2) 1C, 2B, 3D, 4A 3) 1A, 2B, 3D, 4C
4) 1B, 2C, 3A, 4D 5) 1C, 2A, 3D, 4B

50. ஊடகங்களில் பெண்கள் பொதுமைப்படுத்தல்களினூடாகவே சித்தரிக்கப்படுகின்றார்கள் எனும் இக்கருத்தியலின் படி பெண்கள் அழகுணர்வுக்காக மாத்திரம் வெளிப்படுத்தப்படுபவர்களாகவும் ஊடக ஆதிக்கம் ஆண்களிடமே உள்ளது எனும் கருத்தியலை வெளிப்படுத்துவதோடு தொடர்புபடும் அணுகுமுறை

1) உளப் பகுப்புத்திறனாய்வு அணுகுமுறை
2) நல்லொழுக்கம்சார் திறனாய்வு அணுகுமுறை
3) பெண்ணியம்சார் திறனாய்வு அணுகுமுறை
4) மார்க்சியத் திறனாய்வு அணுகுமுறை
5) அழகயல் சார் திறனாய்வு அணுகுமுறை

www.agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
## ஆறாம் தவணைப் பரீட்சை - 2022
# Conducted by Field Work Centre, Thondaimanaru.
## 6th Term Examination - 2022

FWC

| | | | | |
|---|---|---|---|---|
| தொடர்பாடலும் ஊடகக் கற்கையும் II<br>Communication & Media Studies II | Three Hours<br>Gr -13 (2022) | 29 | T | II |

**மேலதிக நேரம் பத்து நிமிடம்**

**பகுதி – II**

**அறிவுறுத்தல் :-**

- ❖ ***இவ்வினாப்பத்திரம் ஏழு வினாக்களினை உள்ளடக்கியுள்ளது.***
- ❖ ***எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்குக.***

***01. தொடர்பாடல் ஒரு சமூகச் செயன்முறையாகும்.***

i) முறைசாராத தொடர்பாடலின் இயல்புகள் **நான்கினைப்** பெயரிடுக. *(4 புள்ளிகள்)*

ii) வெகுசனத் தொடர்பாடலின் இயல்புகள் **நான்கினைப்** பெயரிட்டு அவற்றுள் **இரண்டினைச்** சுருக்கமாக விபரிக்குக. *(8 புள்ளிகள்)*

iii) அச்சு ஊடகங்களிற்கும் இலத்திரனியல் ஊடகங்களிற்குமிடையிலான வேறுபாடுகள் **மூன்றினை** விபரிக்குக. *(12 புள்ளிகள்)*

iv) தொடர்பாடலின் வெற்றிக்கு அதன் பண்புகள் தொடர்பில் கவனம் செலுத்துதல் அடிப்படையானது. அதன்படி தொடர்பாடலின் இயல்புகள் **நான்கினை** உதாரணங்களுடன் விளக்குக. *(16 புள்ளிகள்)*

***02.*** i) ஊடகக்கற்கைப் பாடத்தினை பின்பற்றுவதன் அவசியம் தொடர்பில் **நான்கு** விடயங்களினை குறிப்பிடுக. *(4 புள்ளிகள்)*

ii) பிரசித்த பண்பாட்டியலின் இயல்புகள் **நான்கினைப்** பெயரிட்டு **இரண்டினை** விபரிக்குக. *(8 புள்ளிகள்)*

iii) நேர்வழி மாதிரிகளிற்கும் நேர்வழியல்லாத மாதிரிகளுக்குமிடையிலான வேறுபாடுகளை **மூன்று** அம்சங்களினடிப்படையில் விளக்குக. *(12 புள்ளிகள்)*

iv) பாரம்பரியத் தொடர்பாடலில் பயன்படுத்தப்படுகின்ற நாட்டார் வழிமுறைகள் **நான்கினை** உதாரணங்களுடன் விளக்குக. *(16 புள்ளிகள்)*

***03.*** i) செவ்வியற் பண்பாட்டின் **இரண்டு** இயல்புகளை குறிப்பிடுக. *(4 புள்ளிகள்)*

ii) வெகுசனத் தொடர்பு செயற்பாட்டில் ஹப் (HUB) மாதிரியின் கூறுகள் **நான்கினை** குறிப்பிட்டு **இரண்டினை** விளக்குக. *(8 புள்ளிகள்)*

iii) பாரம்பரியத் தொடர்பாடலின் அவசியம் தொடர்பில் **மூன்று** விடயங்களுக்கூடாக ஆராய்க. *(12 புள்ளிகள்)*

iv) புதிய ஊடகங்களின் இயல்புகள் **நான்கினை** குறிப்பிட்டு உதாரணங்களுடன் விளக்குக. *(16 புள்ளிகள்)*



agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

**04.** i) விமர்சன ரீதியான பெறுநரொருவர் அவசியம் கொண்டிருக்க வேண்டிய திறன்கள் **நான்கினைப்** பெயரிடுக. *(04 புள்ளிகள்)*

ii) உலகில் ஊடக ஒழுங்குமுறைப்படுத்தலில் பயன்படும் அடிப்படை அணுகுமுறைகள் **நான்கினைப்** பெயரிட்டு **இரண்டினை** விபரிக்குக. *(08 புள்ளிகள்)*

iii) பின்வரும் கமெரா எடுப்புக்கள் காட்சிப்புல ஊடகங்களில் பயன்படும் சூழ்நிலைகளினை உதாரணங்களுடன் விளக்குக.

1. அண்மை நிலை எடுப்பு
2. இடைநிலை எடுப்பு
3. நீள் எடுப்பு *(12 புள்ளிகள்)*

iv) தொலைக்காட்சி ஊடகங்களில் ஒளிபரப்பப்படும் படைப்பாக்க நிகழ்ச்சி வகைப்பாடுகள் **நான்கினை** குறிப்பிட்டு உதாரணங்களுடன் விளக்குக. *(16 புள்ளிகள்)*

**05.** i) ஆய்வின் **இரண்டு** வகைகளினைப் பெயரிடுக. *(04 புள்ளிகள்)*

ii) ஆய்வுச் செயற்பாடொன்றில் தரவுப்பகுப்பாய்விற்காக பயன்படுத்தப்படும் வழிமுறைகள் **நான்கினை** குறிப்பிட்டு **இரண்டு** பற்றி சிறுவிளக்கம் தருக. *(08 புள்ளிகள்)*

iii) இலங்கையின் பிரதான ஊடகங்கள் தோற்றம் பெறுவதற்கு காரணமாக அமைந்த சமூக அரசியல் வர்த்தக காரணிகளினை அடிப்படையாக கொண்டு ஆராய்க. *(12 புள்ளிகள்)*

iv) பூகோளமயமாதலின் போக்குகளுக்கு ஏற்ப வெளியிடப்பட்ட பிரதான கருத்தியலாவது தனி உலகப் பண்பாட்டை உருவாக்குவதாகும். அதன்படி பூகோளமயமாதல் செயற்பாடு ஏற்படுத்தும் சாதக, பாதக அம்சங்களினை அடிப்படையாக கொண்டு செய்திப்பத்திரிகை **ஒன்றிற்கு** சிறப்புக் கட்டுரை **ஒன்று** எழுதுக. *(16 புள்ளிகள்)*

**06.** i) ஊடக ஒழுங்குமுறைப்படுத்தலோடு தொடர்புபடும் அமைப்புக்கள் **நான்கினைப்** பெயரிடுக. *(04 புள்ளிகள்)*

ii) பின்வரும் விடயங்கள் தொடர்பில் விபரிக்குக.

அ) மக்கள் மையம்

ஆ) வறுமையை ஒழித்தல் *(08 புள்ளிகள்)*

iii) ஒரு நிறுவனமொன்றின் நன்மதிப்பு அல்லது அபிப்பிராயத்தினை ஏற்படுத்துவதில் ஊடக அதிகாரி மற்றும் பொதுசனத் தொடர்பு அதிகாரி ஆகியோரின் பணிகள் தொடர்பில் விபரிக்குக. *(12 புள்ளிகள்)*

iv) பொது மக்கள் தொடர்பு செயற்பாட்டோடு தொடர்புபடும் பின்வரும் விடயங்களினை உதாரணங்களுடன் விளக்குக.

அ) ஊடக அறிவித்தல்

ஆ) ஊடக மாநாடு

இ) தொழில்சார் பொது மக்கள் தொடர்பு

ஈ) அரச – மக்கள் தொடர்பு *(16 புள்ளிகள்)*

**07.** i) செய்திப்பத்திரிகை ஒன்றில் உள்ளடங்கும் விடயங்கள் **நான்கினை** குறிப்பிடுக. *(04 புள்ளிகள்)*

ii) அபிவிருத்திக்காகச் சமூகத்தில் மாற்றத்தை ஏற்படுத்த நவீன தொடர்பாடல் தொழினுட்பத்தைப் பயன்படுத்தக்கூடிய விதத்தை விபரிக்குக. *(08 புள்ளிகள்)*

iii) பின்வரும் விடயங்கள் தொடர்பில் தகுந்த எடுத்துக்காட்டுக்களுடன் விளக்குக.

அ) சர்வதேச மனித உரிமைகள் பிரகடனம்

ஆ) இலங்கை அரசியல் யாப்பில் ஊடக சுதந்திரம்

இ) தகவல் அறியும் உரிமைச் சட்டம் *(12 புள்ளிகள்)*

iv) பெறுநர்களை மையப்படுத்தி ஊடகத்துறையில் ஏற்பட்டுள்ள போக்குகள் விழிப்புணர்வுமிக்க விமர்சனமிக்க பெறுநர்களை பாதிக்குமாற்றலினை உதாரணங்களுடன் விளக்குக. *(16 புள்ளிகள்)*



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk
agaram.lk